# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 25.03.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# காணாமல் போன வெருகல் வாசி சிறையிலிருந்து வீடுதிரும்பினார்

(பொன்.ஆனந்தம்)

வெருகல் பிரதேச த்தில் இருந்து காணாமல் போனதாக கூறப்பட்ட வெருகல் பூநகர் பகுதியைச் சேர்ந்த சகிந்தன் எனும் குடும்பஸ்தர் நேற்றைய தினம் வீடு வந்தடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் ஜே. ஜனார்த்தனன் அவரின் வீட்டிற்கு சென்று அவரை நலம் விசாரித்துள்ளார் .

இதன்போது குறித்த சகிந்தன் தம்புள்ளை பொலிசரால் கைது செய்யப்பட்டு தடுப்புகாவலில் இருந்ததாக அவரிடம் தெரிவித்ததாக தவிசாளர் குறிப்பிட்டார் அத்தோடு அவரை சில இனம்தெரியாத நபர்கள் தாக்கியும் இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

ஏற்கனவே இவர் சம்பந்தமான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு தவிசாளர் பொலிஸ்மாஅதிபரின்கவனத்திற்கு தெரியப்படுத்தி தெரியப்படுத்தி இருந்தார்.

தம்புள்ளை பொலிசார் இவரை கைது செய்தபோதும் இவரது குடும்பத்திற்கு அறிவிக்காமல் அசண்டையீனமாக

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பு மாவட்டம் அத்திப்பட்டி கிராமமாக மாறும் சூழ்நிலை; ஜனாதிபதி இங்கு வந்து நேரில் பார்வையிட வேண்டும்

## ஜனா ஜனாதிபதிக்கு அழைப்பு



எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டம் அத்திப்பட்டி கிராமமாக மாறும் சூழ்நிலை இருப்பதை ஜனாதிபதி இங்கு வந்து பார்வையிட வேண்டும். இந்த மண்கொள்ளையர்கள் செய்யும் அநியாயத்தைப் பார்க்க வேண்டும்.

02 ஆம் பக்கத்தில்...

# கையொப்பங்களை தமிழ் மொழியில் இடுவோம்

## திருமலையில் ஏற்பாடு

திருகோணமலை விஜய் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழில் கையெழுத்திடுவோம் எனும் நிகழ்வானது தமிழ்மொழி வழியில் பூசைநடைபெற்று நேற்று முன்தினம் அங்குரார்பணம் செய்யப்பட்டது.

தென்கயிலை ஆதீனம் வணக்கத்துக்குரிய தவத்திரு அகத்தியர் அடிகளாரின் நல்லாசியுடனும், மேலும் பல சமூக அமைப்புக்களை சேர்ந்தவர்களுடனும் இவ் நிகழ்வானது நடைபெற்றது.

எமது தாய் மொழியிலே எமது கையொப்பம் இருக்க வேண்டும் என்பதையும், சமூகத்தில் யார் எல்லாம் இப்போதும் தமது கையொப்பங்களை

02 ஆம் பக்கத்தில்...

# மண் அகற்றும் இயந்திரம் குடை சாய்ந்ததில் சாரதி பலி



(க.கிஷாந்தன்)

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேனை பொல்பிட்டிய விகாரைக்கு அண்மையில் சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ள பகுதியில் மண் அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குறித்த இயந்திரம் குடை சாய்ந்து அதன் சாரதி ஸ்தலத்திலேயே பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## தீர்மானம் நிறைவேற்றம்

# கனடியத் தமிழர் பேரவையும் நன்றி தெரிவிக்கின்றது

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை (UNHRC) இலங்கை மீதான A/ HRC/46/ L.1/Rev.1 தீர்மானம் நிறைவேற்றியதைக் கனடியத் தமிழர் பேரவை (CTC) வரவேற்கிறது.

இத் தீர்மானத்திற்கு ஆதரவாக, வாக்களித்த முதன்மைக் குழு

02 ஆம் பக்கத்தில்...

# திருநெல்வேலியில் 24 வர்த்தகர்களுக்கு தொற்றிய கொரோனா; சந்தைக்கு பூட்டு

## யாழ். சந்தையில் 9 பேருக்கு கொரோனா

(யாழ்.சிவகுமார்)

திருநெல்வேலி சந்தை வர்த்தகர்கள் ஒரு தொகுதியினரிடம் எழுமாற்றாக முன்னெடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனையில் நேற்று புதன்கிழமை 24 பேருக்கு கொரோனா தொற்றியது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து திருநெல்வேலிச் சந்தை மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக

02 ஆம் பக்கத்தில்...

# மத அல்லது இன ரீதியான அரசியல் கட்சிகளுக்கு பதிவு இல்லை

மத அல்லது இன ரீதியான அரசியல் கட்சிகளை பதிவு செய்வதில்லையென தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

செவ்வாய்க்கிழமை தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக

02 ஆம் பக்கத்தில்...







## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# நான்கு பிரதேச செயலகப்பிரிவில் யானை வேலிகள் அமைக்க திட்டம்

(றியாஸ் ஆதம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகப்பரிவில் யானை வேலிகள் அமைக்கப் படவுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வன வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்கவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.எஸ்.ஏ.கபூர்தீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில காட்டு யாணைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதனால் பல மனித உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன.

02 ஆம் பக்கத்தில்...




## காணாமல் போனவர்

# உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்பு

( வாஸ் கூஞ்ஞ)



கடந்த மாதம் (பெப்ரவரி) வீட்டைவிட்டு சென்று காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த நபர் இறந்த நிலையில் காட்டுப் பகுதி ஒன்றிலிருந்து இறந்து உருக்குலைந்த

02 ஆம் பக்கத்தில்...



## காணாமல் போனவர் உருக்குலைந்த நிலையில்...

நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். பேசாலை பொலிசாருடன் சம்பவ இடத்துக்குச் சென்ற உறவினர் இவரை அடையாளம் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் தோட்டவெளிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த மாதம் 7 ஆம் திகதி (07.02.2021) ஞாயிற்றுக் கிழமை தான் வசித்து வந்த சகோதரியின் வீட்டிலிருந்து புறப்பட்டபின் இவர் வழமையாக வீடு திரும்பாமையால் உறவினர் மன்னார் பொலிசில் முறையீடு செய்திருந்தனர். அத்துடன் இவரைத் தேடிய நிலையில் இவர்களின் உறவினர்கள் ஈடுபட்டும் இருந்தனர்.

மன்னார் யோசேப்வாஸ் நகர் தோட்டவெளியில் தனது சகோதரியுடன் வசித்து வந்த பூபாலசிங்கம் அருள்ராஜ் (வயது 3%) என்பவரே காணாமல் தேடப்பட்டு வந்த நபராவார். இவர் ஒரு சுவாதினமுற்ற நபர் எனவும் மன்னார் பொலிசில் முறையீடு செய்யப்படடிருந்தது. இந்த நிலையில் செவ்வாய் கிழமை (23.03.2021) கரிசல் காட்டுப் பகுதி ஒன்றில் ஒரு மனித எலும்புக்கூடு காணப்படுவதாக பேசாலை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பேசாலை பொலிசார் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையை பார்வையிட்டதுடன் காணாமல் தேடப்பட்டு வந்த நபரின் உறவினர்களை சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்றபோது இறந்தவரின் உடைகள் பாதணிகளை வைத்து இவரே தேடப்பட்டு வந்த தங்கள் உறவினர் என இறந்தவரின் உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இவ் மரணம் தொடர்பாக மேலதிக விசாரனையை பேசாலை பொலிசார் மேற்கொண்டு வருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

## திருநெல்வேலியில் 24 வர்த்தகர்களுக்கு தொற்றிய...

நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண நகர் நவீன சந்தை வியாபாரிகள் 60 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 9 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து நவீன சந்தை ஒரு பகுதி முடக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழில் கொரோனா பெருகி சமூகத் தொற்றாக உருவெடுத்துள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மேலும் 44 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை இன்று புதன் கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 24 பேர் திருநெல்வேலி சந்தைத் தொகுதி வியாபாரிகள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவருக்கும் கோரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உறுதியானது.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் மண்டைதீவுக்கு கடலுணவு வாங்குவதற்காகச் சென்றவர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 3 கைதிகளுக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மருத்துவ பீட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் புதுக்குடியிருப்பிலும் இருவர் மல்லாவியிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

கிளிநொச்சி பளையில் 4 பேருக்கு கோரோனா வைரஸ் தோற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள்.

வவுனியா பொது வைத்தியசாலையில் இரண்டு பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.







## பசறை பஸ் கோர விபத்தில் உயிர் தப்பிய ஒருவர் வெளியிட்ட தகவல்

பசறை 13ஆம் கட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் உயிர் தப்பிய தாய் ஒருவர் தனது அனுபவத்தை ஊடகத்தில் வெளியிட்டுள்ளார்.

நானும் எனது குழந்தை பதுளை வைத்தியசாலைக்கு செல்வதற்காக பேருந்திற்கு காத்திருந்தோம். 20ஆம் கட்டையில் பேருந்தில் ஏறினோம். குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு பயணிக்கும் போது திடீரென நானும் குழந்தையும் நித்திரையாகி விட்டோம்.

பேருந்து வேகமாக பயணித்தது. திடீரென மிகப்பெரிய சத்தம் ஒன்று கேட்ட திடீரென எழுந்து பார்த்தால் பேருந்து புரண்டு புரண்டு சென்றதனை நான் பார்த்தேன். என் கையில் இருந்த குழந்தையை காணவில்லை.

குழந்தை கையில் இருந்து வீசுப்பட்டு சென்றது. பேருந்து கீழே விழுந்தது. எனக்கு காயம் ஏற்பட்டது.

சிலர் என்னை வந்து தூக்கினார்கள். மேலே தூக்கி வந்தவர்களிடம் எனது குழந்தை எங்கே என கேட்டு கத்தினேன். எனினும் அதற்குள் குழந்தையை மலை உச்சிக்கு கொண்டுவந்து விட்டார்கள் என கூறினார்கள்.

தற்போது நானும் குழந்தையும் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றோம் என பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

## கையொப்பங்களை தமிழ் மொழியில் இடுவோம்..

தமிழ் மொழியில் இடுகின்றனர் என்பதை வெளிக்கொண்டு வரும் முகமாகவும் அதன் மூலம் மாணவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டமையோடு, பனையோலையில் கையொப்பம் வாங்கி அவை பாதுகாக்கப்பட உள்ளமையும் இவ் மன்றத்தின் நோக்கமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத அல்லது இன ரீதியான அரசியல் கட்சிகளுக்கு...

தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தற்போதுள்ள சட்டத்தின்படி, ஒரு அரசியல் கட்சி ஒரு தேசிய கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் மத அல்லது இனக் கட்சிகளை பதிவு செய்ய வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது

தற்போது மத அல்லது இனப் பெயர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உத்தியோகபூர்வ பெயர்களைத் திருத்துவதற்கும், அந்தக் கட்சிகளின் அரசியலமைப்பில் இதுபோன்ற உட்பிரிவுகள் ஏதேனும் இருந்தால் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளுக்குத் தெரிவிப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## தீர்மானம் நிறைவேற்றம் கனடியத் தமிழர்...

நாடுகளுக்கும், இந்தத் தீர்மானத்தின் இணை ஆதரவாளர்களுக்கும், 22 நாடுகளுக்கும் கனடியத் தமிழர் பேரவை நன்றி தெரிவிக்கிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தக் கடுமையாக உழைத்த, ஆறு முக்கிய முதன்மைக் குழு நாடுகளில் ஒன்றான, கனடாவுக்கு சிறப்பு நன்றியைக் கூறுகிறோம்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக, அயராது வாதிட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் முஸ்லிம் சமூகம் உட்பட அனைவருக்கும் கனடியத் தமிழர் பேரவை நன்றி தெரிவிக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின், இத் தீர்மானமானது, இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க, மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலகத்தில், ஒரு பிரத்தியேக அமைப்பை நிறுவுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இன்று இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்திருக்கின்றன. 11 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன. 14 நாடுகள் இத் தீர்மான வாக்களிப்பைத் தவிர்த்துள்ளன.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகப்பிரிவில்...

அத்தோடு பல சேனைப்பயிர்களையும் யானைகள் துவசம் செய்கின்றன. இதனால் விவசாயிகள் பெரும் கஷ்டங்களையும் தொழில் ரீதியாக நஷ்டத்தினையும் அடைந்து வருவதுடன், பல இலட்சம் ரூபா பெறுமனியான சொத்துக்களும் சேதமடைகின்றன.

விவசாயிகள் தங்களது வேளாண்மை செய்கையின் போது பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதுடன், அறுவடை காலத்திலும் வேளான்மை அழிக்கப்படுகின்றன. குறித்த விடயத்தினை கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைரின் ஆலோசனைக்கமைய இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றேன்.

மேற்படி பிரச்சினைகளை கருத்திற்கொண்ட அமைச்சர் விமலவீர திசாநாயக்க கிரான் பிரதேச செயலக பிரிவிற்கு 49கிலோ மீற்றர் யானை வேலியும், வாகரை பிரதேச செயலகப் பரிவிற்கு 18.5கிலோ மீற்றர் யானை வேலியும், செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்கு 20கிலோ மீற்றர் யானை வேலியும், ஓட்டாமாவடி பிரதேச செயலகப் பிரிவிற்கு 11கிலோ மீற்றர் யானை வேலியும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சரின் இனைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## மண் அகற்றும் இயந்திரம் குடை சாய்ந்து சாரதி பலி...

குறித்த சம்பவம் நேற்று (24.03.2021) காலை சுமார் 7 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் நிர்மானிக்கப்பட்டு வரும் அதிசக்தி வாய்ந்த மின் இணைப்பு பணிக்காக சென்று கொண்டிருக்கும் போது குறித்த மண் அகற்றும் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தடுப்பு கட்டை செயலிழந்துள்ளது.

அதனால் குறித்த இயந்திரம் பின்னோக்கி இழுத்துச் செல்லும் போது சாரதி பாய்ந்துள்ளதாகவும் அவர் பாய்ந்த பக்கத்திலேயே இயந்திரம் குடை சாய்ந்ததில் அதில் அகப்பட்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர் பதுளை ஹாலிஎல உடுவர பகுதியை சேர்ந்த யாப்பா முதியன்ஸலாகே சந்தருவான் மதுசங்க யாப்பா (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் கித்துல்கல தெலிகம வைத்தியசாலையில் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டம் அத்திப்பட்டி கிராமமாக மாறும் சூழ்நிலை...

இந்த அரசின் அடிவருடிகளாக சில அரச அதிகாரிகள் செயற்பட்டு இந்த மாவட்ட வளங்களை அழிப்பதை நேரடியாகப் பார்க்க வேண்டும் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அப்போதுன் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருப்பர். அவ்வாறன்றி ஒரு பிரதேசத்தின், ஒரு இனத்தின் ஜனாதிபதியாக மாத்திரம் இருக்கக் கூடாது என்பது எங்கள் வேண்டுகோள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற உறப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலான ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இந்த நாட்டின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் தான் சுற்றாடல் பாதுகாப்பவன், வனவளத்தைப் பாதுகாப்பவன், இயற்கையைப் பாதுகாப்பவன், நாட்டை நேசிப்பவன் என்று கூறுகின்றார். நான் உண்மையில் அந்த வார்த்தைகளை விரும்புகின்றேன். ஆனால், செயல்வடிவத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் மட்டக்களப்பிற்கு ஒரு தடவை வரவேண்டும் என்பதை விரும்புகின்றேன், வேண்டுகோள் விடுக்கின்றேன். மட்டக்களப்பிற்கு அவர் வரவேண்டும். மட்டக்களப்பின் வனவளம் எவ்வாறு அத்துமீறப்படுகின்றது, சேனைப்பயிர்ச்செய்கை என்ற போர்வையில் எவ்வாறு காவுகொள்ளப்படுகின்து, இந்த மாவட்டத்தின் கனிம வளங்களான இல்மனைட், மண் வளங்கள் எவ்வாறு அழிக்கப்படுகின்றது என்பதை அவர் பார்வையிட வேண்டும்.

ஐநாவில் இலங்கைக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை அமோக வரவேற்புடன் நிறைவேறியிருக்கின்றது. இந்த நேரத்தில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ‘தலைகுப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை’ என்ற அடிப்படையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இலங்கை அரசு மாறி மாறி விடும் பிழைகளினால் இன்று சர்வதேசத்தின் முன் அவமானப்பட்டு நிற்கின்றது. இந்த நிலைமைக்கு தமிழர்களோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ காரணமல்ல. இதற்கு முற்றுமுழுதான காரணம் இந்த அரசும், அதனைப் பிரதிநித்துவப் படுத்துபவர்களுமேயாகும் .

இந்த வாக்கெடுப்பிலே இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்ற நிலையில் பல நாடுகளை திரைமறைவில் இருந்து இயக்கிய இந்தியா இந்தப் பிரேரணை வெற்றி பெற வேண்டும், இலங்கையிலே சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுகின்றார்கள். அவர்களுக்குப் பூரண அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கூறிய இந்தியா இந்தப் பிரேரணையில் நடுநிலை வகித்தது என்பது உண்மையிலே ஈழத் தமிழர்களை வேதனைக்குள்ளாக்கியிருக்கின்ற விடயமாகவே தமிழர்கள் உணர்கின்றார்கள்.

தற்போது வெளியுறவு அமைச்சர் மாகாண சபைத் தேர்தல் சம்மந்தமாகவும், பதின்மூன்றாம் திருத்தம் சம்மந்தமாகவும், அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாகவும் பேசுகின்றார் என்றால் இந்தத் தீர்மானத்தின் விளைவே அது என்பதை நாம் உணருகின்றோம். மனித உரிமைக் கூட்டத்தொடர் முடிவற்றதும் இந்த அமைச்சர்கள் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதைப் போன்று கதைப்பார்கள் என்பதும் யாம் அறிந்த விடயமே. இருப்பினும் இலங்கை இந்தப் பிரேரணையை, இலங்கைக்கெதிராக சர்வதேசம் கொண்டுள்ள நிலைமையைப் புரிந்து நடக்கும் என்று நினைக்கின்றேன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நாட்டின் ஒற்றுமைக்கோ, சிங்களவர்களுக்கோ எதிரானது அல்ல. இந்த நாட்டை நேசிக்கும் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்த நாட்டிற்குள்ளே தமிழ் மக்கள் சுதந்திரமாக, சுயநிர்ணயமாக வாழ்வதற்கு ஆசைப்படுகின்றார்கள். முழு அதிகாரப் பரவலை வேண்டி நிற்கின்றார்கள். நாங்கள் எமது மக்கள் இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழக் கூடாது, சமத்தவத்துடன் வாழ வேண்டும் என்று நேசிப்பவர்களே ஒழிய இந்த நாட்டிற்கோ, சிங்களத்திற்கோ எதிரானவர்கள் அல்ல என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது அரசியல் ரீதியான ஒரு தீர்வையே வேண்டி நிற்கின்றது. மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தான் இந்த நாட்டை சீரழிவுக்குள் கொண்டு சென்றிருக்கின்றது. யானை தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டும் என்று சொல்வதைப் போல இலங்கை அரசு மாறி மாறி விடும் பிழைகளினால் இன்று சர்வதேசத்தின் முன் அவமானப்பட்டு நிற்கின்றது. இந்த நிலைமைக்கு தமிழர்களோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ காரணமல்ல. இதற்கு முற்றுமுழுதான காரணம் இந்த அரசும் இந்த அரசைப் பிரதிநித்துவப்படுத்தும் அமைச்சர்களுமேயாகும். இன்று பந்து உங்கள் பக்கம் இருக்கின்றது. அதனை நீங்கள் தடுத்தாட வேண்டும் என்று நினைத்தால் பாரதூரமான விளைவுகளைச் சந்திப்பீர்கள். அந்தப் பந்தை நன்றாக அடித்து விளையாடுவீர்கள் என்றால் இந்த நாடு சுபீட்சமாக எதிர்காலத்திலே ஒரு வளம்மிக்க நாடாக மாறும் என்பதை இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## காணாமல் போன வெருகல் வாசி சிறையிலிருந்து வீடுதிரும்பினார்...

இருந்திருக்கிறார்கள் என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்றுபொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியதோடு; சகிந்தனை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சகிந்தன் அவர்களின் விடயத்தில் திருகோணமலை சமுகம் மற்றும் இன்னும் சில மனிதாபிமானிகளும் சமூக ஆர்வலர்களும் காணாமல்போன நிலையில் கண்டறிய செயற்பட்டிருந்தனர்.

இது பற்றி தெரிய வருவதாவது;

இம்மாதம் 9ம் திகதியிலிருந்து திருமலை ஈச்சிலம்பற்று பூநகர் கிராமத்தை சேர்ந்த துரைசிங்கம் சகிந்தன் (29 வயது) எனும் இளம் குடும்பஸ்தர் கடந்த 13ம்திகதிலிருந்து கொழும்பில் கூலித்தொழிலுக்கு சென்றவர் காணாமல் போனதையிட்டு அவரது மனைவி குழந்தைகள் ஒவ்வொரு பொலிஸ் நிலையமாக அலைந்தார்கள்.

இவரது காணாமல் போன செய்தி இனம் மதம் பாராது தமிழ் முஸ்லிம் மக்கள் சமுக வலைத்தளங்கள் மூலம் பரப்புரையில் ஈடுபட்டு தேடுதல் வேட்டையில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து வரும் வழியில் தம்புள்ளை மத்திய பொருளாதரமையத்திலுள்ள கடை அருகில் தனது குழந்தைகளுக்கு பழம் வாங்க சென்றவரை சில காடையர்கள் தாக்கி பொலிஸில் பிடித்து கொடுத்து சிறைச்சாலைக்கு. அனுப்பட்டதாக தெரியவருகின்றது. இந்நிலையில் கண்டி சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்

இதே நேரம் தமது கணவன் காணாமல் போனதில் அவரை மீட்க இம்முறை அதிகமாக இனம் மதம் பாராது உழைத்த சமுக ஊடகங்களில் வெளிப்படுத்தியமைக்கும் மனைவி நன்றிகளை தெரிவித்துள்ளார்.


SwissLife
Select
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா -வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# கம்பி வலையில் சிக்கிய சிறுத்தை

(க.கிஷாந்தன்)

நுவரெலியா - அக்கரபத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போபத்தலாவ வனப் பகுதியில் கம்பிகளில் சிக்குண்டு, காயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட மலையகத்திற்கு உரித்தான சிறுத்தையை, சிகிச்சைகளுக்காக தாம் பொறுப்பேற்றுக் கொண்டதாக வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

போபத்தலாவ வனப் பகுதியில் பகுதியில் புதன்கிழமை காலை கம்பி வலையில் சிக்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுத்தை, கடும் போராட்டத்துக்கு மத்தியில் உயிருடன் பிடிக்கப்பட்டு, நுவரெலியா மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வேட்டையாடுவோரினால் இந்த கம்பி கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கம்பி வலையில் சிக்கியதால் காயம் ஏற்பட்டிருந்த குறித்த சிறுத்தையை கடும் சிரமத்துக்கு மத்தியில் மயக்க ஊசி செலுத்தி அதிகாரிகள் மீட்டனர்.

குறித்த சிறுத்தை கம்பிகளுடன், போபத்தலாவ அரச விளை நிலத்தின் கிழக்கு பகுதியிலுள்ள உத்தியோகப்பூர்வ வீடுகளுக்கு மேல் வீழ்ந்திருந்த நிலையில், மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.



சுமார் 6 அடி நீளமான 9 முதல் 10 வயது மதிக்கத்தக்க மலையக பகுதிக்கு உரித்தான சிறுத்தையொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சிறுத்தையின் உடலில் பாரிய காயங்கள் காணப்படுவதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வனவிலங்கு திணைக்களத்தின் மிருக வைத்திய அதிகாரிகள், அக்கரபத்தனை பொலிஸ் அதிகாரிகள் இணைந்து, சிறுத்தையை மீட்டுள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட சிறுத்தை, சிகிச்சைகளுக்காக நுவரெலியா மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# விபத்தை முன்வைத்து மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம்

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்

(வாஸ் கூஞ்ஞ)

தலைமன்னார் பியரில் இடம்பெற்ற ரயில் மற்றும் பேரூந்த விபத்தைத் தொடர்ந்து இப் பகுதி மாணவர்களின் பாடசாலை வரவு மிக குறைவாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. மாணவர்களின் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துவரும் இவ்வேளையில் மாணவர்களின் கல்வி பாதிப்படையாத நிலையை நாம் கவனத்தில் எடுத்து அதற்கான செயல்பாட்டில் இறங்க வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

தலைமன்னார் பியரில் இடம்பெற்ற ரயில் பேரூந்து விபத்து தொடர்பாக அப் பகுதியில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் அங்கு வருகை தந்து மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்

தலைமன்னார் பியரில் இடம்பெற்ற இந்த ரயில் பேரூந்து விபத்தானது இப்பகுதி மக்களுக்கு மட்டுமல்ல இந்த மன்னார் மாவட்டம் முழுதும் ஒரு சோகத்தை உருவாக்கியுள்ளது. இதன் ஒரு பிரதிப்பலிப்பாக காயப்பட்டவர்களுக்கு குருதி வழங்க வந்தவர்களின் தொகையை அனைவரும் பார்த்து இருப்பீர்கள்.

இவ் விபத்து நடந்த அடுத்த தினமே நான் எமது மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களையும் அழைத்து மன்னார் மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பற்ற சகல ரயில்வே கடவைகளின் விபரங்களையும் திரட்டித் தரும்படி கோரியிருந்தேன். இங்கு மட்டுமல்ல மன்னார் மாவட்டத்தில் பல இடங்களில் இவ்வாறான பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் காணப்படுகின்றன.

இது விடயமாக நான் புகையிரத நிலைய திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியுள்ளேன். இது இவ்வாறு இருக்க தலைமன்னார் பியரில் நடந்த இவ் விபத்தைத் தொடர்ந்து இப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வது மிக குறைவாக காணப்படுவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதையும் நாம் கவனத்துக்கு எடுக்க வேண்டியுள்ளது. நமது பாடசாலை மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த விபத்து நடந்த வீதியானது பிரதேச சபைக்கு உற்பட்ட வீதியாக இருப்பதனால் இவர்களின் கோரிக்கைக்கு அமைவாக வீதி அதிகார சபையிடம் இவ் இடத்தில் இரு பக்கங்களும் வீதியில் வேகத் தடுப்புக்கள் அமைக்கும்படி நான் அவர்களிடம் கோரியுள்ளேன். இவையும் இந்த இடத்தில் அமைக்கப்படும்.

ஆகவே இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கின்ற இவ்வேளையில் நாம் எமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறைக் கொண்டவர்களாகவும் செயல்பட வேண்டும் என்பதையும் நான் இவ்வேளையில் உங்களை கேட்டு நிற்கின்றேன்.

இந்த புதிய கடவையினூடாக கடந்த ஐந்து ஆறு வருடங்களாக ரயில் சென்று வருகின்து. துர்



வஷ்சமாக சம்பவம் அன்று இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. இவ் விபத்துக்கு இது மட்டும் காரணமல்ல பல காரணங்கள் இருக்கின்றது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இது விடயமாக நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம். இங்கு காணப்படுகின்ற ஏனைய விடயங்களும் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நீங்கள் என்னிடம் கையளித்திருக்கும் கோரிக்கைகளும் ஆராயப்பட்டு எம்மால் முடிந்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என தெரிவித்து நிற்கின்றேன் என இவ்வாறு தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் அரச காணி வழங்கலில் பராபட்சம் முஸ்லிம் சிங்கள ஊடகவியலாளர்கள் முற்றாகப் புறக்கணிப்பட்டுள்ளனர்



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பில் அரச காணி வழங்கலில் முஸ்லிம் சிங்கள ஊடகவியலாளர்கள் முற்றாகப் புறக்கணிப்பட்டுள்ளனர். இது அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் திட்;டமிட்ட செயல்பாடு என்பதால் இந்த விடயத்தில் ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய ஏறாவூர் நகர சபையின் உறுப்பினருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் புதன்கிழமை ஜனாதிபதிக்கு அவசர மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

ஊடகவியலாளர்கள் கடந்த யுத்த காலத்திலும் சரி தற்போதைய காலகட்டத்திலும் சரி மக்களின் நடப்பு விவகாரங்களை வெளிக் கொண்டு வந்து குரலற்ற மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருப்பவர்கள்.

அதேவேளை மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இணைப்புப் பாலமாகவும் அவர்கள் எப்போதும் இருந்து வருபவர்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நிலையான இன ஐக்கியத்திற்காகவும் இந்த நாட்டுக்காகவும் அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அர்ப்பணிப் போடு பணியாற்றும் இத்தகைய ஊடகவியலாளர்களின் பணியை எவரும் இனம் மதம் என்ற நோக்கில் குறைத்து மதிப்பிட்டு புறந்தள்ளலாகாது.

ஆயினும் இந்த புறக்கணிப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிப்படையாக இடம்பெற்றிருப்பது வியப்பை அளிக்கிறது.

மட்டக்களப்பில் கடந்த வாரம் 33 தமிழ் சமூக ஊடகவியலாளர்கள் என்று கூறப்படுகின்றவர்களை மாத்திரம் தெரிவு செய்து அரச அதிகாரிகளும் அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சரும் கலந்து கொண்ட அரச நிகழ்வொன்றில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதில் காத்தான்குடி ஏறாவூர் கல்குடா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் ஊடவியலாளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிங்கள ஊடகவியலாளர்களும் வேறு சமூகம் என்ற அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கடந்த 2019ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் வதிவிடக் காணி இல்லாத ஊடகவியலாளர்களுக்கு அரச காணி வழங்கும் நேர்முகப் பரீட்சைக்கு ஊடகவியலாளர்கள் சமூகமளித்திருந்தபோதும் அதிலிருந்து முஸ்லிம் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அனைவரும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு தமிழ் சமூக ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் அரச காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எனவே இனம் மதம் சமூகம் என்ற அடிப்படையில் பிரித்து நோக்கி அரச நிருவாகத்தின் மூலம் பேதங்களை வளர்க்காது காணி வழங்கப்படாமல் விடுபட்டிருக்கின்ற முஸ்லிம் சிங்கள ஊடகவியலாளர்களையும் மேலும் பல்வேறுபட்ட அரசியல் பின்னணிகளைக் கருத்திற் கொண்டு மாவட்டத்தில் காணி வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற ஏனைய தமிழ் ஊடவியலாளர்களுக்கும் உடனடியாகக் காணி வழங்க வேண்டும்

இத்தகைய ஒரு தீர்மானத்தை ஏறாவூர் நகர சபை அங்கீகரித்துள்ளது. இந்த விடயத்தை ஜனாதிபதி பிரதமர் ஊடக அமைச்சர் காணி அமைச்சர் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் உடனடிக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மாவட்டத்தில் கடந்த காலங்களைப் போன்று இத்தகைய இன மத அநீதி அரசாங்க நிருவாகத்திற்கூடாக இனிவரும் காலங்களிலும் இடம்பெறக் கூடாது என்பதில் நாம் கரிசனையாக உள்ளோம்.

# திருகோணமலையில் 148 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை உவர்மலை, விவேகாநந்தா கல்லூரியில் திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். ஸ்ரீதரன் அவர்களது தலைமையில் கடந்த 2021.03.01 முதல் 2021.03.17 வரையும் நடைபெற்ற இருவாரகால தொழில் வான்மை விருத்தி பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த பட்டதாரிப்பயிலுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.சீ.லால் பெர்னான்டோ அவர்களும், கௌரவ அதிதியாக கிழக்கு மாகாணக்கல்வி பணிப்பாளர் எம்.ரீ.எம். நிஷாம் அவர்களும் அழைக்கப்பட்டிருந்ததோடு பிரதிக்கல்வி பணப்பாளர், கோட்டக் கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கணக்காளர் போன்றோர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது குறித்த இருவாரகால பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த திருகோணமலை, தம்பலகாமம் மற்றும் குச்சவெளி கல்வி கோட்டங்களின்கீழ் இணைக்கப்பட்டிருந்த தமிழ், சிங்கள மொழிமூல 148 பட்டதாரிப்பயிலுநர்களுக்கும், வளவாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



செவ்வாய்க்கிழமை கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பொருத்து வீடுகள் அமைக்கும் வேலைதிட்டதினை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவரும், கோறளைப்பற்று பிரதேசசபை ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஊரியன்கட்டு பிரதேசத்தில் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைத்திருந்தார்.

படம்: ரக்ஸனா






# சம்மாந்துறையில் கொட்டும் மழையிலும் சுலோகங்களுடன் வீதிக்கு இறங்கிய சுகாதாரத்துறையினர்




(நூருல் ஹுதா உமர் , ஐ. எல்.எம். நாஸிம்)

மக்களிடையே காச நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 அன்று சர்வதேச ரீதியாக உலகக் காசநோய் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒருகட்டமாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் இணைத்து நடத்திய காச நோய் தொடர்பிலான விழிப்புணர்வு நடைபவனி நேற்று காலை கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சுகாதாரதுறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பங்குபற்றலுடன் சம்மாந்துறையில் நடைபெற்றது.

காசநோய் பற்றிய விழிப்புணர்வு பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், சுலோகங்களை ஏந்திக்கொண்டு சம்மாந்துறை வீதிகளில் இந்த விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது. இவ்விழிப்புணர்வு நடைபவனியில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஆஸாத் எம். ஹனீபா, திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். நியாஸ் அஹமட், மார்பு நோய் சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திலீப் மபாஸ், பொதுசுகாதார பரிசோதகர்கள், வைத்தியத்துறை சார் ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.




## 54 ஆவது தேசிய புத்தரிசி விழா 2021



(சண்முகம் தவசீலன்)

54 ஆவது தேசிய புத்தரிசி விழா நிகழ்வுகள் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் இடம் பெற்றது

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமலநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.குணாளன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிராம அலுவலர் மற்றும் கமநல சேவை நிலைய அரசஅலுவலர்கள் மற்றும் கிராம விவசாய பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அரிசிகளை வழங்கி வைத்தனர்

வருடா வருடம் காலலபோக நெல் அறுவடையின் பின்னர் அனைத்து கமநல சேவை நிலையங்கள் ஊடாகவும் புத்தரிசியை பெற்று அக்ர சக்ய ஜெயஸ்ரீ மகா போதிக்கு வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

அந்தவகையில் 54 ஆவது தேசிய புத்தரிசி விழா ஊடாக இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் இந்த புத்தரிசி விழா சிறப்புற இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

## மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலயம் மல்யுத்தப்போட்டியில் மாகாணத்தில் முதலிடம்



கிழக்கு மாகாண 46ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மல்யுத்தப்போட்டியில் மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய மாணவன் தங்கப்பதக்கத்தினைப் பெற்று தேசியமட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

குறித்த பாடசாலையில், தரம் 11இல் கல்வி கற்கும் சி.ஜெயசுதன் என்ற மாணவனே தங்கப்பதக்கத்தினை வென்றுள்ளதுடன், அதே வகுப்பில் கல்வி பயில்கின்ற இ.நிரோஜன் இரண்டாம் இடத்தினைப் பெற்று வெள்ளப்பதக்கத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.பாடசாலையின் அதிபர் க.தியாகராசா வழிகாட்டலில், வித்தியாலய விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ந.நிசோத் பயிற்சி அளித்துள்ளார்.

## பௌதீக அடிப்படை வசதிகளற்ற மரப்பாலம் பாடசாலை



(சஞ்சயன்)

மண்முனை மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட மரப்பாலம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை பல்வேறு பௌதீக வள ஆளணி அடிப்படைக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக பாடசாலைச் சமூகம் சுட்டிக்காட்டுகின்றது.



இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மரப்பாலம் 185 சீ கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மரப்பாலம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி மாத்திரமே கற்பிக்கப்படுவதனால் இடைநிலை பயிலும் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதுடன், இடைவிலகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜபுரம், சின்னப்புல்லுமலை, மாவிலையாறு போன்ற கிராம மக்களின் பிள்ளைகள் இப்பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வி பயில்வதாகவும், இடைநிலை பயில போதிய வருமானமுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் மாத்திரம் போக்குவரத்து பஸ் சேவையின்மைக்கு மத்தியில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு 15 கிலோமீற்றர் தூரமுள்ள செங்கலடி நகரப் பாடசாலைக்கு செல்வதாகவும் தெரியவருகிறது.

மரப்பாலப் பாடசாலை, சுற்று மதிலின்றி போதிய வகுப்பறை கட்டட வசதிகளின்றி அடிப்படை பாடங்களுக்குத் தேவையான உரிய ஆசிரியர்கள், நூலகம் இன்றி இயங்குவதனால் மாணவர்களின் கற்றல் தேவைகள் முழுமையாக பூர்த்திசெய்யப்படுவதில்லையென பெற்றோர் கவலையுடன் அங்கலாய்க்கின்றனர்.

மாணவர்களின் உடல் உள ஆரோக்கிய விருத்திக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் உடைந்து சேதமடைந்து துருப்பிடித்த நிலையிலுள்ளதனால், விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்த முடியாத நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளதுடன், குடிநீர் வசதி இன்மையினால் சுகாதாரத்துக்கேற்ப மலசலகூட வசதிகள் துப்பரவற்று காணப்படுவதாகவும் இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகுந்த அவதியுறுவதாகவும் தெரியவருகிறது.

## சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளுமை மிக்க பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு



சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாற்றத்திற்கான வலையமைப்பு மற்றும் Leo club of Cecilian's ஆகியன இணைந்து 'ஆளுமை மிக்க தலைமைத்துவம்' எனும் தொனிப்பொருளில் ஒரு நிகழ்வினை நடாத்தியது.

ஆளுமை மிக்க தலைமைத்துவத்துடன் பல துறைகளில் தலைமைத்துவத்தில் உள்ள பெண்களை கௌரவிப்பதும், பெண்பிள்ளைகளை ஊக்குவிப்பதும் இந் நிகழ்வின் முக்கிய நோக்கமாக உள்ளது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் அவர்களுக்கு ஆளுமை மிக்க தலைமைத்துவம் எனும் பாராட்டு சின்னம் இவ் வலையமைப்பினரால் நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் ஏற்கனவே மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் ந. சத்தியானந்தி, மாவட்ட அபிவிருத்தி இணைப்பு குழு செயலாளர் மங்களேஸ்வரி சங்கர், மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரன் ஆகியோருக்கும் மாற்றத்திற்கான வலையமைப்பினரால் ஆளுமை மிக்க தலைமைத்துவம் எனும் பாராட்டு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யானை-மனிதன் மோதலைத் தடுக்க பல்வேறு வேலைத்திட்டங்கள்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)



தினம் தினம் தொடரும் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதலைதை தடுக்க வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் என்.சுரேஸ்குமார் தெரிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தன் வழிகாட்டலில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையே அதிக மோதல்கள் இடம்பெறும் மட்டக்களப்புவாகரை பிரதேச செயலகப்பிரிவின் கல்லரிப்பு கிராமத்தில் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

சிதைவடைந்துள்ள யானை வேலிகளைப் புனரமைத்தல் யானைகள் வரும் வீதிகளில் மின் விளக்குகளைப் பொருத்துதல் காட்டுப்பகுதிகளில் சிரமாதானங்களை மேற்கொள்ளல் உட்பட பல விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வனஜீவராசிகள் திணைக்கள மாவட்ட பணிப்பாளர் என்.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வாகரை பிரதேச செயலாளர் வாகரை பிரதேச சபை தலைவர் பொலிசார் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## 22 வருடகால அரச சேவையை பாராட்டி கௌரவிப்பு



(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் கடந்த 05 வருடங்களாக கடமையாற்றிவிட்டு தனது 55 வயதில் 22 வருட அரச சேவையில் இருந்து ஓய்வு நிலைக்குச் சென்ற எஸ்.தமிழழகனின் சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் திருகோணமலை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள கணக்காளர் என்.பாலநந்தன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.நவேந்திர ராஜா, திட்டமிடல் வைத்திய பிரிவின் வைத்திய அதிகாரிகளான எஸ்.சிவச்செல்வம், எஸ்.உதயனன், கப்பல்துறை மருந்து உற்பத்திப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.வர்மேந்திரன், பிரதம சேவை உத்தியோகத்தர் திருமதி. சீ.ஆர்.நிர்மலநாதன் உள்ளிட்ட சுதேச திணைக்கள உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சிறுதேன்கல் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான கழுத்துப்பட்டிகள் வழங்கிவைப்பு

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மட்/ககு சிறுதேன்கல் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்விகற்கும் மிகவும் வறிய நிலையிலுள்ள நூறு மாணவர்களுக்கு கழுத்துப்பட்டிகள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

ஜேர்மனி, ஸ்ருட்காட்டை தளமாகக்கொண்ட 'உறவுகளுக்கு கரம்கொடுப்போம்' அமைப்பின் நிதியுதவியில், அவ்வமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர் சு.சியாந் அவர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களோடு கிரான் பிரதேச செயலாளர் சுந்தரமூர்த்தி ராஜ்பாபு அவர்களும் கலந்துகொண்டு கழுத்துப்பட்டிகளை மாணவர்களுக்கு அணிவித்தனர்.

ஜெர்மனியின்ஸ்ருட்காட்டைதளமாகக்கொண்டு செயற்பட்டுவரும் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பினரால் மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளிலும் வறிய மாவணர்களுக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கையில் கொண்டாடப்பட்ட பாகிஸ்தானின் தேசிய தினம்






**(சில்மியா யூசுப்)**

பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கையை தளமாகக் கொண்ட பாகிஸ்தான் சமூகம் தனது 81 வது தேசிய பாகிஸ்தான் தினத்தை பாரம்பரிய ஆர்வத்துடன் 23 செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள உயர் ஸ்தானிகர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வு பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மது சாத் கட்டக் அவர்களினால் பாகிஸ்தான் தேசிய கொடி ஏற்றி அங்குரார்ப்பனம் செய்து வைத்தார்.

பாகிஸ்தானை ஒரு வலுவான, துடிப்பான, முற்போக்கான, ஜனநாயக மற்றும் நலன்புரி நாடாக மாற்ற தீர்மானித்துள்ளனர் என பகிஸ்தானின் அதிபர் டொக்டர் ஆரிப் அல்வியின் செய்தியில் குறிப்பிட்டார்.

மேலும் லாகூரில் நிறைவேற்றப்பட்ட 1940 ஆம் ஆண்டு வரலாற்றுத் தீர்மானத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23 ஆம் திகதி பாகிஸ்தான் தேசிய தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடதக்க ஒரு விடயமாகும் இது துணைக் கண்டத்தின் முஸ்லிம்களுக்கு ஒரு தனி தாயகத்தை கோருகிறது, இது இறுதியில் ஆகஸ்ட் 14, 1947 அன்று பாகிஸ்தானை உருவாக்க வழிவகுத்தது.

ஜனாதிபதி மற்றும் பாக்கிஸ்தான் பிரதமரின் சிறப்பு செய்திகள் வாசிப்பில் அதில் இரு தலைவர்களும் அன்றைய முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, காயிட்-இ-அசாம் முஹம்மது அலி ஜின்னா, டாக்டர் அல்லாமா முஹம்மது இக்பால் மற்றும் பாகிஸ்தான் இயக்கத்தின் பிற தலைவர்களும் இதில் நினைவூட்டப்பட்டன.

இந் நிகழ்வில் இலங்கையை தளமாகக் கொண்ட பாகிஸ்தான் சமூக உறுப்பினர்கள், பல்வேறு தரப்பு பங்கேற்பாளர்கள் மற்றும் ஊடக பிரதிநிதிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்தியாவின் பிடியில் உள்ள கஸ்மீர் மக்களுக்கு சுதந்திரம் பெற்று அவர்கள் சமாதானமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு பிராத்திப்பதோடு இலங்கை - பாகிஸ்தான் நட்புரவு இலங்கையின் பாதுகாப்பு வர்த்தக நட்புரவு பற்றியும் மிக இறுக்கமாக உள்ளதாகவும் இலங்கைக்கு பாக்கிஸ்தானின் உதவி தேவைப்படுமெனில் பாக்கிஸ்தான் உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

## முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 4326 ஏக்கரில் சிறுபோக பயிர்செய்கை!



முத்தையன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக விவசாய செய்கைக்கான குளக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் முத்தையன் கட்டு நீர்பாசன திணைக்கள அலுவலகத்தில் 23 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இதன்போது பிரதி நீர்பாசன பணிப்பாளர் பிரதி மாகாணவிவசாய பணிப்பாளர் பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களம், கமநலசேவை உதவிப்பணிப்பாளர் கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள்ளார்கள்.

இந்த கூட்டத்தின் போது 3ஆயிரத்தி 305 ஏக்கரில் நெற்செய்கையும் ஆயிரத்தி 21 ஏக்கரில் உபஉணவு செய்கையுமாக 4ஆயிரத்தி 326 ஏக்கரில் செய்கை பண்ண தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய குளத்தின் தண்ணீரும் 23.03.2021 அன்று திறந்துவிடப்பட்டுள்ளது.

சிறுபோக விதைப்பிற்கான கால எல்லையாக 23.03.2021 தொடக்கம் 23.04.2021 வரை திகதியிடப்பட்டுள்ளது வேலியுடன் பயிரும் கால்நடையுடன் ஆழும் என கால்நடை கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

குளத்தில் போதியளவு நீர் உள்ளதால் இம்முறை உபஉணவு செய்கையிலும் அதிகளவில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை பிரதேச யுவதிகளுக்கு கைவினை அலங்கார பொருட்கள் செய்யும் பயிற்சி பட்டறை

**(றாசிக் நபாயிஸ்)**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிரதேச யுவதிகளுக்கு கைவினை அலங்கார பொருட்கள் செய்யும் பயிற்சி பட்டறை நிகழ்வு நேற்று பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.பௌசுல் ஹிபானாவின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் தலைமையில் நடைபெற்றது.

கலாசார திணைக்களத்தின் வேலைத் திட்டங்களின் ஒன்றான “தொலஸ் மகே பகன” வேலைத் திட்டத்தின் கீழ் யுவதிகளின் உற்பத்தி திறனை, கலை மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் நோக்கில் யுவதிகளுக்கு கைவினை அலங்கார இப்பயிற்சியின் பிரதான வளவாளர்களாக ஸீனத் துரபா மற்றும் கௌசர் ஜஹான் வழங்கி வைத்தார்கள்.



பிரதேச யுவதிகளை அலங்கார கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து அதனை சந்தைப்படுத்தும் நோக்கோடு இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.சாலி, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி ஜனுபா நௌபல், திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.எம்.ஹஸன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.முகர்அப், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல்.பாத்திமா சிபாயா, மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் இம்திஸா ஹஸன் மற்றும் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## பட்டிருப்பு தேசிய பாடசாலையில் மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா



**(கமல், எம்.ஐ.எம்.அஸ்ஹர்)**

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடி மாணவத் தலைவர்களுக்கான சத்தியப் பிரமாணம் மற்றும் சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்று பாடசாலை திறந்த வெளியரங்கில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

பாசாலை அதிபர் திரு.எம். சபேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திரு. நேசகஜேந்திரன், இதயகுமார் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை, வைத்திய அத்தியட்சகர் டாக்டர் . புவனேந்திரநாதன் , களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி மேஜர் பிரேமரெட்ண ,பொறியியலதளர் சுலக்ஸன் , பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், ரீ.சத்தியரூபன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சின்னங்களைச் சூட்டிவைத்தனர்.

குறித்த சின்னஞ்சூட்டும் விழாவின் போது 109 மாணவ தலைவர்கள் சின்னஞ் சூட்டப்பட்டதாகவும் இச் சின்னஞ்சூட்டு விழாவினை சிறப்பாக நடாத்துவதற்கு இப் பாடசாலையில் 1995 ஆண்டு சாதாரண தரப்பரீட்சை எழுதிய பழைய மாணவர்களின் உதவி வழங்கியிருந்தனர் அவர்களுக்கு மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் இதன் போது தெரிவித்தார்.

## பிளாஸ்டிக் கழிவுகளினால் நிரம்பிய கரையோர பிரதேச கடல் பகுதிகள்

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேச கடல்பகுதிகள் பிளாஸ்டிக் கழிவுகளினால் நிரம்பி காணப்படுகின்றன.

குறிப்பாக பெரிய நீலாவணை மருதமுனை கல்முனை ,காரைதீவு, நிந்தவூர் பகுதி கடற்பகுதிகள் யாவும் பிளாஸ்டிக் கழிவுகள் நிரம்பி எவரும் கவனிப்பாரற்று கிடக்கின்றன.

அப்பகுதி மக்கள் பொழுது போக்கு இடமாக பாவிக்கின்ற கடற்பகுதிகள் மற்றும் மீனவர்களின் வாடிகள் ஆகியவற்றில் குறித்த பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கியுள்ளன.

இக்கழிவு பொருட்களில் பிளாஸ்டிக் போத்தல்கள் பொலித்தீன் பைகள் சோடாப்போத்தல்கள் மருத்துவ கழிவுகள் பியர் டின்கள் என்பன உள்ளடங்கின்றன. மேலும் கடற்கரையை அண்டிய கால்வாயில் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசும் இடமாகவும் மற்றும் நுளம்பு பெருகும் இடமாகவும் மாறிவருகின்றது.

கடற்கரையை அண்டிய மக்கள் கூடும் இடங்களை அண்மித்த இடங்களில் இத்தகைய துர்நாற்றம் வீசும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக இடையிடையே சிரமதானம் எனும் பெயரில் கண்துடைப்பிற்காக இப்பகுதிகள் துப்பரவும் செய்யப்படுகிறதுடன் இது தொடர்பில் எவ்வித அவதானிப்புக்களும் இன்றி உரிய தரப்பினர் செயற்பட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேற்படி கடற்கரை பகுதிகளுக்கு வெளிமாவட்ட மக்கள் மட்டுமன்றி அப்பகுதியை சேர்ந்தவர்களும் வந்து செல்லும் இடமாகவுள்ளமையினால் குறித்த பகுதிகளை துப்புரவு செய்யவும் அதனை நிரந்தரப் புனரமைப்பு செய்யவேண்டும் எனவும் மக்கள் கேரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.